රාජ්‍ය භාෂා කොමිෂන් සභාව

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

OFFICIAL LANGUAGES COMMISSION





2018 වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2018

வருடாந்த அறிக்கை

அரசகரும மொழிகள் ஆணைக்குழு

“ஜனஜயசிட்டி” கட்டடத்தொகுதி,
09 ஆம் மாடி,
நாவல வீதி,
இராஜகிரிய.

2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை

அரசகரும மொழிகள் ஆணைக்குழு 1991 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஸ்த்தாபிக்கப்பட்ட நியதிச் சட்ட நிறுவனமாகும்.

01. இலக்கு

பொதுமக்களுக்கு சேவையினை வழங்குகின்ற சகல நிறுவனங்களையும் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு ஊக்குவித்த நிறுவனமாக விளங்குதல்.

02. பணிகள்

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசாரணை, கண்காணிப்பு, கல்வி மற்றும் போதனை என்பவற்றினூடாக பொதுமக்களின் இரு மொழித் தேவைகளை வழங்குதல்.

03. நோக்கங்கள்

ஆணைக்குழுவின் பொது நோக்கங்கள் பின்வருமாறு

(அ) அரசகரும மொழிக் கொள்கையின் பயன்பாடு தொடர்பில் கொள்கை ரீதியான அடிப்படைகளை சிபாரிசு செய்தல் மற்றும் அரசியலமைப்பின் ளை ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுகின்றமை பற்றி விழிப்புடன் செயற்படுதல் மற்றும் கண்காணித்தல் ஆகும்.

(ஆ) (இங்கு, இதன் பின்னர் ''குறித்த மொழி'' என குறிப்பிடப்படுகின்ற) அரசியலமைப்பின் 18 ஆம் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிப் பிரயோகம் அரசியலமைப்பின் ளை ஆம் அத்தியாயத்தின் தாத்பரியம் மற்றும் நோக்கத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்படுவதைப் பொறுப்புடன் பார்த்துக் கொள்வதற்கு அவசியமாகக் காணக்கூடிய சகல செயற்பாடுகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

(இ) அரசகரும மொழிகள் மதிப்பீடு, ஊக்குவிப்பு, மற்றும் அவற்றின் அந்தஸ்து, சமத்துவம் மற்றும் பிரயோகிக்கும் உரிமையினை வரவேற்றல், நடைமுறைப்படுத்திச் செல்லுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.

(ஈ) தனது செயற்பாடுகள் மூலம் மற்றும் கிடைக்கப் பெறும் ஏதேனும் முறைப்பாடுகளுக்கு பதில் வழங்குதல் ஆகிய இரண்டு முறைகளிலும் விசாரணைகளை நடாத்துதல் மற்றும் இந்த சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

04. பிரதான செயற்பாடுகள்

குறித்த நோக்கங்களை வெற்றி கொள்வதற்காக ஆணைக்குழு பிரதான நான்கு செயற்பாடுகளை நிறைவேற்றுகிறது.

கொள்கை ரீதியான அடிப்படைகளை வகுத்தல் - போதனை

அரசகரும மொழிகளின் பிரயோகம் தொடர்பில்
அரசியலமைப்பின் ஏற்பாடுகள் அரச இயந்திரத்தினால் சரியான
முறையில் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்தல் - கண்காணிப்பு

குறித்த மொழிகளின் அந்தஸ்து அல்லது பிரயோகம் தொடர்பில் - கல்வி

அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் மொழி
உரிமைகள், மீறல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் - விசாரணை

அமைப்பு வியூகம்
(அ) அரசகரும மொழிகள் ஆணைக்குழு நியமிக்கப்படுவது ஜனாதிபதி அவர்களாலாகும். ஆணைக்குழு ஆறு அங்கத்தவர்களைக் கொண்டமைந்ததாகும். ஒரு அங்கத்தவர் ஆணைக்குழுவின் தலைவராக பெயரிடப்படுவார்.

2017/08/31 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கீழே குறிப்பிடப்படடுள்ள அங்கத்தவர்களை கொண்டதாகும்.

01. திரு. றஞ்சித் உயங்கொட தலைவர் 2017.08.31 முதல் 2018.03.17
02. பேராசிரியர், வணக்கத்திற்குரிய கியுலெகெதர நாரத தேரர்,
அங்கத்தவர் 2017.02.14 முதல் 2018.03.17
03. திரு.ஜீவன் தியாகராஜா அங்கத்தவர் 2017.02.14 முதல் 2018.03.17
04. திரு.ஏ.எம்.எம். நௌஷாட் அங்கத்தவர் 2017.02.14 முதல் 2018.03.17
05. திருமதி. நந்தினி விஜயரத்தினம் அங்கத்தவர் 2017.02.14 முதல் 2018.03.17
06. பேராசிரியர்.சோமசுந்தரம் சந்திரசேகரம் அங்கத்தவர் 2017.02.14 முதல் 2018.03.17

2018/04/04 ஆம் திகதி நியமிக்கப்பட்ட ஆணைக்குழு கீழே குறிப்பிடப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டமைந்ததாகும்.

01. பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம் தலைவர் 2018.04.04 முதல் 2018.12.31

02. கலாநிதி, வணக்கத்திற்குரிய அக்குரட்டியே நந்தநாயக்க தேரர் அங்கத்தவர் 2018.04.04 முதல் 2018.12.31

03. திரு. ஜீவன் தியாகராஜா அங்கத்தவர் 2018.04.04 முதல் 2018.12.31


04. திருமதி. நந்தினி விஜயரத்தினம் அங்கத்தவர் 2018.04.04 முதல் 2018.12.31

05. திரு. எல்.பீ.குமுதுலால் அங்கத்தவர் 2018.04.04 முதல் 2018.12.31

06. திரு.எஸ். மொஹிதீன் அங்கத்தவர் 2018.04.04 முதல் 2018.12.31

இக்காலப்பகுதியில் இலங்கை நிர்வாக சேவையின் (ஸ) ஆம் வகுப்பைச் சேர்ந்த திருமதி ருவினிக்கா பெரேரா அதிகார பூர்வமாக ஆணைக்குழுவின் செயலாளராகக் கடமையாற்றினார்.

(அ) 2018.12.31 திகதியில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் அமைப்பு வியூகம்



(ஆ) பணியாட்டொகுதி

2018.12.31 திகதியாகும் போது ஆணைக்குழுவில் கடமையாற்றிய பணியாட்டொகுதியினர்.

தொடர் இலக்கம்	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்களின் எண்ணிக்கை	உண்மையான பணியாட்களின் எண்ணிக்கை	குறிப்பு
1.	பணிப்பாளர்	01	-	வெற்றிடம் 01
2.	உதவிப் பணிப்பாளர்	01	01	
3.	மொழி அதிகாரி	03	01	வெற்றிடங்கள் 02
4.	நிர்வாக அதிகாரி	01	01	
5.	நிதி அதிகாரி	01	-	வெற்றிடம் 01
6.	மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரி	10	03	வெற்றிடங்கள் 07
7.	அபிவிருத்தி அதிகாரி	04	-	வெற்றிடங்கள் 04
8.	முகாமைத்துவ உதவியாளர்	10	08	வெற்றிடங்கள் 02
9.	மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ ஆங்கிலம்)	01	-	வெற்றிடம் 01
10.	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் /ஆங்கிலம்)	01	-	வெற்றிடம் 01
11.	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம் / தமிழ்)	01	-	வெற்றிடம் 01
12.	சாரதி	03	02	வெற்றிடம் 01
13.	காரியாலய உதவியாளர்	04	03	வெற்றிடம் 01
	முழு எண்ணிக்கை	42	20	வெற்றிடங்கள் 17

01. மொழிக் கணிப்பாய்வு

மொழிக் கணிப்பாய்வானது ஆணைக்குழுவின் கண்காணிப்பு பணிக்குரிய ஒரு செயற்பாடாகும். இதன்போது, அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆணைக்குழு நேரடி சோதனைக்குட்படுத்தி இனங்காணப்பட்ட அரசகரும மொழிக் கொள்கைக்கு அனுகூலமற்ற நிலைமைகள் தொடர்பில் சிபாரிசுகளை வழங்குதல் மற்றும் அந்த சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை தொடர்ச்சியாகக் கண்காணிக்கும் செயற்பாடு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

மொழிக் கணிப்பாய்வுகளின் போது ஆணைக்குழுவினால் அரசகரும மொழிக் கொள்கைக்குரிய தரவுகளை சேகரிப்பதற்காக வினாக்கொத்து ஒன்றைப் பயன்படுத்துகிறது. கணிப்பாய்விற்காக தெரிவு செய்யப்படும் நிறுவனங்களுக்கு முதலில் சமர்ப்பிக்கப்படுகிறது. இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுவது உடனடியாகப் பெற்றுக்கொள்ளப்பட முடியாத தகவல்கள் தொடர்பில் முன்கூட்டியே தயார் நிலையொன்றினை நிறுவனத்தில் ஏற்படுத்துவதாகும். அந்த வினாக்கொத்துடன் கணிப்பாய்வுகளுக்கான திகதி நியமிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

ஆணைக்குழுவின் மொழிக் கணிப்பாய்வுக் குழு ஆறு அலுவலர்களைக் கொண்டதாகும். உதவிக் பணிப்பாளர் அல்லது மொழி அதிகாரியின் தலைமையில் மொழி மேம்பாட்டு மற்றும் விசாரணை அதிகாரிகள் மூவர், முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் மற்றும் காரியாலய உதவியாளர் ஒருவரும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

மொழிக் கணிப்பாய்வுக் குழுவானது, நியமிக்கப்பட்ட திகதிகளுக்கு ஏற்ப உரிய நிறுவனங்களை கணிப்பாய்வுக்கு உட்படுத்தும். இதன்போது வினாக்கொத்து கொண்டு கீழே குறிப்பிடப்பட்ட அடிப்படைகளுக்கு ஏற்ப கணிப்பாய்வு மேற்கொள்ளப்படும்.

1. நிறுவன வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்படும் சகல பலகைகள் (பெயர்ப் பலகைகள், தகவல் பலகைகள், அறிவுறுத்தற் பலகைகள்)
2. பொதுமக்கள் சேவைக்காக பயன்படுத்தப்படும் சகல ஆவணங்கள்
3. அரசகரும மொழிக் கொள்கைத் தொடர்பிலான அறிவு
4. அலுவலர்களின் தொடர்பாடல் இயலுமை
5. சிங்களம் / தமிழ் பயிற்சிப் பாடநெறி
6. அலுவலர்களின் மொழித் தேர்ச்சி
7. இணையத்தளம்
8. மொழிபெயர்ப்பு நடவடிக்கைகள்
9. பிரவேச காரியாலயப் பின்னணி
10. நிறுவனத்திற்கு உரிய விஷேட விடயங்கள்

(உதாரணம் - பொலிஸ் நிலையங்கள் - முறைப்பாடுகளை பதிவு செய்தல் / பிறப்பு / விவாக / மரணப் பதிவாளர் - பதிவுச் சான்றிதழ்களை அரசகரும மொழிகளில் பெற்றுக் கொடுத்தல்)

இந்த சோதனையின் போது அரசகரும மொழிகள் தொடர்பில் காணப்படுகின்ற அனுகூலமற்ற நிலைமைகள் அனைத்தும் இனங்காணப்படும். அந்த அனுகூலமற்ற நிலைமைகளை சீர்செய்வதற்காக உரிய நிறுவனத்தின் தலைவருக்கு சிபாரிசுகள் வழங்கப்படும். அந்த சிபாரிசுகளை 03 மாத காலத்திற்குள் சீர் செய்து ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும். இந்த வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட மொழிக் கணிப்பாய்வு அட்டவணை 1 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது.

மொழிக் கணிப்பாய்வு


(2018 ஜனவரி முதல் 2018 டிசம்பர் வரை)

தொடர் இல	இடம்	திகதி
1.	தெஹிவளை காவல் நிலையம்	2018.01.09
2.	சமுர்தி தலைமை அலுவலகம் - தெஹிவளை	2018.01.09
3.	நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை – தெஹிவளை	2018.01.10
4.	தபால் அலுவலகம் -தெஹிவளை	2018.01.10
5.	பொது நூலகம் - தெஹிவளை	2018.01.11
6.	மத்திய கலாசார நிலையம் - காலி	2018.02.06
7.	வீதி அபிவிருத்தி அதிகார சபை – காலி	2018.02.06
8.	தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை	2018.02.06
9.	தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை	2018.02.08
10.	தேசிய இறைவரி பிரதேச அலுவலகம் - காலி	2018.02.08
11.	காணித் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பிரதேச அலுவலகம் - காலி	2018.02.08
12.	தேசிய இறைவரித் திணைக்களம்	2018.03.06
13.	தபால் திணைக்களம்	2018.03.08
14.	சமுர்தி அபிவிருத்தித் திணைக்களம்	2018.03.09
15.	மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்	2018.03.15
16.	வீதி அபிவிருத்தி அதிகார சபை – தலைமையகம்	2018.03.16
17.	இலங்கை மின்சார சபை	2018.03.20
18.	தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை	2018.03.23
19.	தொழிலாளர் திணைக்களம்	2018.04.03
20.	விவசாய அபிவிருத்தித் திணைக்களம்	2018.04.05
21.	அரசாங்க அச்சகத் திணைக்களம்	2018.04.06
22.	சமூகப் பாதுகாப்புச் சபை	2018.04.20
23.	போக்குவரத்துச் சபை	2018.04.23
24.	சிறைச்சாலைகள் திணைக்களம்	2018.04.24
25.	குடிவரவு குடியகல்வு திணைக்களம்	2018.04.26
26.	சமூக சேவைகள் திணைக்களம்	2018.05.15
27.	பிரதேச சபை – மாத்தளை	2018.05.21
28.	விவசாய திணைக்கள பிரதேச அலுவலகம் - மாத்தளை	2018.05.22
29.	மாநகர சபை – மாத்தளை	2018.05.22
30.	தெங்கு அபிவிருத்தி சபை – மாத்தளை	2018.05.23
31.	தபால் அலுவலகம் - மாத்தளை	2018.05.23
32.	மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை – மாத்தளை	2018.05.23
33.	இலங்கை மின்சார சபை பிரதேச அலுவலகம் - மாத்தளை	2018.06.05
34.	தெஹியோவிட்ட பிரதேச சபை	2018.06.05
35.	தெஹியோவிட்ட இலங்கை மின்சார சபை பிரதேச அலுவலகம்	2018.06.07
36.	தெஹியோவிட்ட பிரதேச மின்சார சபை காரியாலயம்	2018.06.07
37.	தெஹியோவிட்ட சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்	2018.06.20
38.	பிரதேச சபை – பதுளை	2018.06.20
39.	தேசிய இறைவரி பிரதேச அலுவலகம் - பதுளை	2018.06.21
40.	விவசாய திணைக்களம் பிரதேச அலுவலகம் - பதுளை	2018.07.10
41.	தபால் அலுவலகம் - குருணாகல்	2018.07.10
42.	வலயக் கல்வி காரியாலயம் - குருணாகல்	2018.07.12
43.	பிரதேச சபை – குருணாகல்	2018.07.24
44.	பிரதேச சபை – வவுனியா	2018.07.25
45.	தபால் அலுவலகம் - வவுனியா	2018.07.24
46.	வலயக் கல்வி காரியாலயம் - வவுனியா	2018.07.24
47.	நகர சபை – வவுனியா	2018.07.24
48.	குடிவரவு குடியகல்வு மாவட்டக் காரியாலயம் - வவுனியா	2018.08.08

49.	தபால் அலுவலகம் - களுத்தறை	2018.08.08
50.	நகர சபை – களுத்தறை	2018.08.10
51.	பிரதேச சபை – களுத்தறை	2018.08.10
52.	வலயக் கல்விக் காரியாலயம் - களுத்தறை	2018.08.28
53.	கரைத்துறைப் பற்று பிரதேசச் செயலகம் - முல்லைத்தீவு	2018.08.28
54.	பிரதேச சபை – முல்லைத்தீவு	2018.08.28
55.	தர்மபுரம் காவல் நிலையம் - முல்லைத்தீவு	2018.08.28
56.	ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் - முல்லைத்தீவு	2018.08.29
57.	தபால் அலுவலகம் - முல்லைத்தீவு	2018.08.29
58.	மல்லாவி காவல் நிலையம் - முல்லைத்தீவு	2018.08.29
59.	மாவட்ட விவசாய அபிவிருத்தி காரியாலயம் - இரத்தினபுரி	2018.09.13
60.	பிரதேச சபை - இரத்தினபுரி	2018.09.13
61.	தபால் அலுவலகம் - இரத்தினபுரி	2018.09.13
62.	மாநகர சபை - இரத்தினபுரி	2018.09.14
63.	தேசிய இறைவரி பிரதேச அலுவலகம் - இரத்தினபுரி	2018.09.14
64.	பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் - இரத்தினபுரி	2018.09.14
65.	வாழைச்சேனை காவல் நிலையம் - மட்டக்களப்பு	2018.09.19
66.	காத்தாண்குடி காவல் நிலையம் - மட்டக்களப்பு	2018.09.19
67.	பிரதேச சபை – மட்டக்களப்பு	2018.09.20
68.	மாவட்ட தொழிலாளர் அலுவலகம் - மன்னார்	2018.10.09
69.	மாவட்டச் செயலகம் - மன்னார்	2018.10.09
70.	தபால் அலுவலகம் - மன்னார்	2018.10.10
71.	பிரதேச சபை – மன்னார்	2018.10.10
72.	பிரதேச செயலகம் - மாவனல்லை	2018.10.17
73.	பிரதேச சபை – மாவனல்லை	2018.10.17
74.	விவசாய அபிவிருத்தி திணைக்கள பிரதேச அலுவலகம் - கேகாலை	2018.10.17
75.	சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் - கேகாலை	2018.10.18
76.	நகர சபை – கேகாலை	2018.10.19
77.	மாவட்ட தொழிலாளர் காரியாலயம் - திருகோணமலை	2018.11.14
78.	மாநகர சபை – திருகோணமலை	2018.11.14
79.	பிரதேச சபை – திருகோணமலை	2018.11.14
80.	சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் - திருகோணமலை	2018.11.15
81.	தபால் அலுவலகம் - திருகோணமலை	2018.11.15
82.	மாநகர சபை – அநுராதபுரம்	2018.11.28
83.	மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் - அநுராதபுரம்	2018.11.28
84.	பிரதேச சபை – மிகிந்தலை	2018.11.29
85.	மாவட்ட தொழிலாளர் அலுவலகம் - அநுராதபுரம்	2018.11.29
86.	பிரதேச சபை – மிகிந்தலை	2018.11.29
87.	சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் - அநுராதபுரம்	2018.11.29
88.	தபால் அலுவலகம் - யாழ்ப்பாணம்	2018.12.11
89.	காவல் நிலையம் - காங்கேசன்துறை	2018.12.11
90.	மாவட்ட தொழிலாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்	2018.12.11
91.	பிரதேச சபை – நல்லூர்	2018.12.12
92.	மாநகர சபை – யாழ்ப்பாணம்	2018.12.12
93.	சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் - யாழ்ப்பாணம்	2018.12.12
94.	பிரதேச சபை – ஊர்காவற்துறை	2018.12.12
95.	பிரதேச சபை – மானிப்பாய்	2018.12.13
96.	காவல் நிலையம் - ஊர்காவற்துறை	2018.12.13

இதற்கு மேலதிகமாக இந்த வருடத்திற்குள் புகையிரத நிலையங்களில் மொழிக் கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கேற்ப,

	இடம்	திகதி
1.	கம்பஹா புகையிரத நிலையம்	2018.01.24
2.	வவுனியா – தெற்கு புகையிரத நிலையம்	2018.02.11
3.	அநுராதபுரம் புதிய நகர புகையிரத நிலையம்	2018.02.12
4.	காலி புகையிரத நிலையம்	2018.02.20
5.	களுத்தறை புகையிரத நிலையம்	2018.03.13
6.	பொல்கஹவெல புகையிரத நிலையம்	2018.05.08
7.	சிலாபம் புகையிரத நிலையம்	2018.06.26
8.	குருணாகல் புகையிரத நிலையம்	2018.07.04
9.	கல்கிஸ்ஸை புகையிரத நிலையம்	2018.07.05
10.	கிளிநொச்சி புகையிரத நிலையம்	2018.08.30
11.	மட்டக்களப்பு புகையிரத நிலையம்	2018.09.19
12.	அவிசாவளை புகையிரத நிலையம்	2018.10.05
13.	திருகோணமலை புகையிரத நிலையம்	2018.11.15
14.	யாழ்ப்பாணம் புகையிரத நிலையம்	2018.12.13



காலி வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை



களுத்தறை நகர சபை



மாவனல்லை பிரதேசச் செயலகம்

07. மொழி வட்டம்

மொழிக் கல்வியை பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்குதல் நீண்டகால செயற்பாட்டின் ஒரு ஆரம்பமாகும். அதன் காரணமாகவே அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் கல்வி அமைச்சினூடாக பாடசாலைகளில் மொழி வட்டத்தினை நிறுவுவதற்கான சுற்றறிக்கையொன்று விநியோகிக்கப்பட்டது. அதற்கேற்ப மொழி வட்டத்தினை நிறுவுவதற்கான வசதிகளை வழங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத் தயாரிப்பில் உள்ளடக்கி 07 நிகழ்ச்சித் திட்டங்கள் காலி, மாத்தளை, பதுளை, கம்பஹா, மன்னார் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டன. இதன் போது அந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றிய பாடசாலைகளின் நூலகங்களுக்கு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் ஒரு புத்தகத் தொகுதி எனும் அடிப்படையில் வழங்கப்பட்டது.

	இடம்	திகதி	பங்குபற்றிய பாடசாலைகளின் எண்ணிக்கை
1.	காலி, ஹோல் டி ஹோல் மண்டபம்	2018.02.21	49
2.	மாத்தளை, பிரதேசச் செயலகம்	2018.05.24	43
3.	பதுளை, பிரதேசச் செயலகம்	2018.06.21	46
4.	கம்பஹா பிரதேச சபை	2018.06.29	37
5.	மண்முனை வடக்கு பிரதேச செயலகம்	2018.09.20	50
6.	மாவட்டச் செயலகம் - மன்னார்	2018.10.11	23
7.	ஸ்வர்ண ஜயந்த்தி கல்லூரி கேட்போர் கூடம் - கேகாலை	2018.10.18	41



கேகாலை மாவட்டம்



காலி மாவட்டம்



மாத்தளை மாவட்டம்



மட்டக்களப்பு மாவட்டம்



மன்னார் மாவட்டம்

08. **முறைப்பாடுகள் மீதான விசாரணை**

அரசகரும மொழிக் கொள்கை மீறல் தொடர்பில் கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஆணைக்குழுச் சட்டத்தினால் ஆணைக்குழுவுக்கு விஷேட அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்தகைய முறைப்பாடுகளை விசாரணை செய்வது ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். ஆணைக்குழுவுக்கு இத்தகைய முறைப்பாடுகள் கீழே காணப்படும் முறைகளில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

1. கடிதங்கள் மூலம்
2. ஆணைக்குழுவிற்கு வருகைத் தருவதன் மூலம்
3. அச்சு ஊடகத்தில் வெளியிடப்படும் முறைப்பாடுகள்
4. மின்னஞ்சல்
5. தொலைபேசி அழைப்புகள்
6. அமைச்சின் 1956 அழைப்பு மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படும் முறைப்பாடுகள்.

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்குள் ஆணைக்குழுவுக்கு 233 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளில் 177 முறைப்பாடுகளுக்கான விசாரணை நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த வருடத்திற்குள் நிறைவு செய்யப்பட்ட சில விஷேட முறைப்பாடுகள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

முறைப்பாடுகள்	**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**
வீதிப் போக்குவரத்து அதிகார சபைக்குரிய கிரிபத்கும்புரவில் அமைந்துள்ள அருங்காட்சியகக் கட்டடத் தொகுதியில் மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பிரதான பெயர்ப் பலகையில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற ‘‘பெருந்தெருக்கள் அருங்காட்சியகக் கட்டடத்தொகுதி’’ எனும் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகிறது என.	இது தொடர்பில் வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர், குறித்த பெயர்ப் பலகையில் காணப்படும் எழுத்துக்கள் திருத்தம் செய்யப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
கொழும்பு மாநகரசபை நியாயாதிக்க எல்லைக்குள் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ‘‘ சீ ஸ்ரீட்’’ (Sea Street) எனும் பெயர்ப் பலகையில் சிங்களம் மற்றும் தமிழ் மொழியிலுள்ள மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் நகர ஆணையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த பெயர்ப் பலகை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு அதன் பிரதியொன்று ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
தொல் பொருட்கள் பாதுகாப்புப் பிரிவிற்குள் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பிரதான பெயர்ப் பலகையில் ‘‘ தொல் பொருட்கள் பாதுகாப்புப் பிரிவு’’ எனும் வாசகத்தில் சிங்கள மொழியிலுள்ள ‘‘பிரிவு’’ மற்றும் ‘‘அவசர அழைப்புகள்’’ போன்ற வாசகங்களுக்கான தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் அந்தப் பிரிவின் பொறுப்பதிகாரி, குறித்த பெயர்ப் பலகையைத் திருத்தம் செய்யுமாறு தொல்பொருள் ஆராய்ச்சி பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெயர்ப் பலகை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான உயிர்க்காப்பு வண்டியில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ''கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - இராகம'' எனும் நிறுவனப் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் அதன் பணிப்பாளர், குறித்த வைத்தியசாலையின் பெயர் திருத்தம் செய்யப்பட்டு சரியாக தயாரித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
ச.தொ.ச கம்பனியினால் விற்பனை செய்யப்படும் 01 கிலோகிராம் சீனிப் பொதியில் குறிப்பிடப்பட்டிருக்கும் ''வெள்ளைச் சீனி'' எனும் வாசகத்தில் உள்ள தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் விற்பனைக்குப் பொறுப்பான, பிரதி பொது முகாமையாளர், குறித்த தமிழ் மொழிபெயர்ப்பு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
நீர்கொழும்பு மாநகரசபைக்குச் சொந்தமான லொறி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ''நீர்கொழும்பு மாநகரசபை'' எனும் நிறுவனப் பெயரில் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் நகர ஆணையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த பெயர்ப் பலகை திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு புகைப்படப் பிரதியொன்றும் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் பிரிவில் பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது எனவும் அதில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அறிவித்தல் மற்றும் மோட்டார் வாகன உரிமையை மாற்றிக் கொடுக்கும் போது அறவிடப்படும் கட்டணங்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகையும் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் ஆணையாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த பெயர்ப் பலகை ஜனசக்தி நிறுவனத்தின் அனுசரணையில் வழங்கப்பட்ட ஒன்று எனவும், அதிலுள்ள தமிழ்மொழி மூலமான பெயர்ப் பலகை ஒன்றைப் பெற்றுத் தருமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அதன் நிர்வாகத்திற்குப் பொறுப்பான ஆணையாளர் தெரிவித்துள்ளார்.
திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் மற்றும் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் இணையத்தளங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஆங்கிலமொழியில் மட்டும் காணப்படுகின்றன என.	இது தொடர்பில் செயலாளர் மற்றும் தலைவரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த இணையத்தளத்தை மும்மொழிகளிலும் வடிவமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
தபால் திணைக்களத்தினால் பொதுமக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் துரித தபால் சேவையின் போது பயன்படுத்தப்படும் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட உறைகளில் ''Srilanka Courier'' எனும் வாசகம் ஆங்கில மொழியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதென.	இது தொடர்பில் அஞ்சல் மா அதிபரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த உறைகளுக்கு மும்மொழிகளிலும் தயார் செய்யப்பட்ட இறப்பர் முத்திரை பயன்படுத்தப்படுவதாக செயற்பாட்டுப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதி அஞ்சல் மா அதிபரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ருவன்வெல்ல பிரதேசச் சபைக்குச் சொந்தமான பேரூந்து தரிப்பு நிலையத்திற்கு அருகில் நிறுவப்பட்டுள்ள பெயர்ப் பலகையில் ‘‘கரவனெல்ல மத்திய பேரூந்து தரிப்பிடம்’’ எனும் வாசகத்தில் தமிழ்மொழி பிழையாகக் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் சப்ரகமுவ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. பெயர்ப் பலகை திருத்தம் செய்யப்பட்டுள்ளது.
வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான, 1. (சீதாவக்க நீதிமன்ற சந்திக்கருகில் நிறுவப்பட்டிருக்கும் வீதிப் பெயர்ப் பலகையில் ‘‘மாளிகா மாவத்தை’’ எனும் வாசகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது எனவும், 2. கரவனெல்ல நகர மத்தியில் நிறுவப்பட்டிருக்கும் பச்சை நிறத்திலுள்ள வீதிகள் தொடர்பிலான பெயர்ப் பலகையில் ‘‘ கேகாலை’’ எனும் வாசகத்தில் தமிழ் மொழிபெயர்ப்ப பிழையாகக் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் மாகாண பொறியியலாளர் மற்றும் சீதாவக்கபுற நகரசபையின் செயலாளரிடமிருந்தும் அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த பெயர்ப் பலகைத் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக அந்த தலைவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பதுளை மாநகர சபைக்குச் சொந்தமான, 1. தீயணைப்பு அலகுக்குச் சொந்தமான வாகனங்களிலுள்ள (Fire and Risk) எனும் வாசகங்கள் ஆங்கில மொழியில் மட்டும் காணப்படுகின்றதென மற்றும் 2. குப்பைக் கூளங்களை அகற்றுவதற்காக உபயோகிக்கும் டிரக்டர் வண்டிகளில் (Municipal Council) என்பது குறுகிய சொற்றொடர் ஒன்றாக பயன்படுத்தி MC என உபயோகித்து அதைத் தமிழ் மொழியில் அர்த்தமற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று.	இது தொடர்பில் நகர ஆணையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த வாகனங்களில் நிறுவனப் பெயர் மும்மொழிகளிலும் குறிப்பிடப்பட்டு காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக நகர பொறியியலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான அலுவலர்களின் சீருடையில் காணப்படும் இலட்சனையில் ‘‘ இலங்கை சிறைச்சாலை’’ எனும் வாசகம் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் ஆணையாளர் நாயகம், குறித்த சீருடையில் உள்ள உத்தியோகப்பூர்வ இலட்சனையை மும்மொழிகளிலும் தயாரிப்பதாக அறிவித்துள்ளார்.
ஹங்வெல்ல பிரதேச சபைக்குச் சொந்தமான பொது மயான பூமியில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையில் ‘‘பொது மயான பூமி’’ எனும் வாசகத்தில் உள்ள தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் செயலாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த பெயர்ப் பலகையில் தமிழ்மொழி எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடுவலை மாநகர சபைக்குரிய பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ‘‘கடுவலை பஸ் தரிப்பு நிலையக் கட்டடத்தொகுதி’’ எனும் வாசகத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் நகர ஆணையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த பெயர்ப் பலகையில் எழுத்துப் பிழைகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
சீத்தாவக்க நகர சபையினால் முகாமை செய்யப்படும் வாகனத் தரிப்பிட நிலையத்தில் வாகனங்களுக்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டுக்கள் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதென	இது தொடர்பில் செயலாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த பற்றுச்சீட்டுக்களின் அச்சிடப்பட்ட தொகை முடிவடைந்ததன் பின்னர் மும்மொழிகளிலும் அந்தப் பற்றுச்சீட்டுக்களை அச்சிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது
இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மஹரகம, கேகாலை மற்றும் அலவ்வ ஆகிய இலங்கைப் போக்குவரத்துச் சபை டிப்போக்களுக்குச் சொந்தமான பேரூந்துகளில் மக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பிரயாண முடிவிட பெயர்ப் பலகைகள் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் அதன் தலைவரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. அதன் பிரதிப் பொது முகாமையாளர், கொழும்பு / வடமேல் / சப்ரகமுவ பிரதேச முகாமையாளர்களுக்கு குறித்த பேரூந்துகளின் பெயர்ப் பலகைகளை மும்மொழிகளிலும் தயாரித்துக் காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
சப்ரகமுவ மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்குச் சொந்தமான தெஹியோவிட்டவிலிருந்து எஹெலியகொட வரை பயணிக்கும் SGNA-4494 இலக்கமுடைய பேரூந்தில் மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகை சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் சப்ரகமுவா வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. குறித்த பேரூந்தின் பெயர்ப் பலகை மும்மொழிகளிலும் தயார் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான SGZA-2837 இலக்கமுடைய வாகனத்தில் மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் நிறுவனப் பெயர் (Chief Engineers Sabaragamuwa என ஆங்கிலத்தில் மட்டும்) குறிப்பிடப்பட்டுள்ளது என.	இது தொடர்பில் மின்சாரப் பொறியியலாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. அந்த வாகனங்களில் நிறுவனப் பெயரை மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நைவலடீரீம் பெரடைஸ் வினோத பூங்காவிற்கு வருகைத் தருகின்ற பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் நுழைவுச்சீட்டு சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதெனவும் அந்தப் பூங்காவிற்குள் மக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகைகள் மற்றும் தகவற் பலகைகளும் சிங்கள மொழியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன என.	இது தொடர்பில் நிறுவனத்தின் முகாமையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. உரிய பெயர்ப் பலகைகளின் மொழிபெயர்ப்பிற்காக தேவையான ஒத்துழைப்பை வேண்டியிருப்பதுடன் அதற்கேற்ப அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மொழிபெயர்ப்பாளர் குழுவில் உள்ளவர்களின் உதவியை எடுக்குமாறு அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சினூடாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து அம்பாந்தோட்டை பிரதேசத்தில் அமுல்படுத்தப்பட்ட ''கம் உதாவ'' வீடமைப்பு செயற்றிட்டத்தில் கம்உதாவ எனும் வாசகம் தமிழ் மொழியில் அதேவடிவில் இடப்பட்டிருந்ததாகவும், அந்த செயற்றிட்டத்திற்குச் சமாந்தரமாக அமுல்படுத்தப்பட்டு வரும் ''ஷில்பசதிய'' மற்றும் ''செமட்ட செவன'' எனும் செயற்றிட்டங்களின் பெயர்களும் தமிழ் மொழியில் அதே வடிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அவை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு குறிப்பிட வேண்டும் என.	இது தொடர்பில் செயலாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. ''கிராம எழுச்சி'' எனும் குறியீட்டுப் பெயர் மும்மொழிகளிலும் பயன்படுத்துவதாகவும், ''செமட்ட செவன'' எனும் குறியீட்டுப் பெயர் மும்மொழிகளிலும் அவர்களிடம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குறியீட்டுப் பெயரையும் அரசகரும மொழிகள் திணைக்களத்திடம் தேவையான ஒத்துழைப்பைப் பெற்று மொழிபெயர்ப்பைச் செய்து கொள்ளுமாறு குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கொழும்பு மாநகர சபையினூடாக வழங்கப்படும் வாகனத் தரிப்பிட கட்டண ரசீது சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மட்டும் காணப்படுவதாகவும் மற்றும் சில பெயர்ப் பலகைகள் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றன என்றும்.	இது தொடர்பில் நகர ஆணையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. பொறியியலாளரினால் பணிப்பாளர் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டண ரசீதை மும்மொழிகளிலும் தயாரித்திருப்பதாகவும், குறிப்பிட்ட அறிவித்தல் பலகையையும் மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் வெள்ளவத்தை கடற்கரைக்கு அருகில் பொறுத்தப்பட்டிருக்கும் விளம்பரப் பலகை சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் தலைவரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த பெயர்ப் பலகை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
மக்கள் வங்கிக் கிளையில் மக்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் சில அறிவித்தற் பலகைகள் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் கிளை முகாமையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட அறிவித்தற் பலகைகளை மும்மொழிகளிலும் தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் விடுமுறைக் கோரல் படிவம் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுவதென்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக வெளிக் கலைஞர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் படிவம் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகிறது என்றும்	இது தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த விடுமுறைக் கோரல் பத்திரம் மற்றும் படிவம் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்து.
காவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தகவல்கள் தமிழ் மொழியில் குறிப்பிடப்பட்டில்லை எனவும், போக்குவரத்து காவல் துறையினருக்குரிய சில பெயர்ப் பலகைகள் சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படுகின்றது என்றும்.	இது தொடர்பில் காவல் மா அதிபரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குத் தேவையான தகவல்களை மும்மொழிகளிலும் தயார் செய்து மீண்டும் அந்த இணையத்தளத்தை மீளாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதி பாதுகாப்புத் தேசிய சபைக்குச் சொந்தமான பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்படும் பிரதான பெயர்ப் பலகை சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் தலைவரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த பெயர்ப் பலகை மும்மொழிகளிலும் தயார் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் தேசிய வர்த்தகச் சபைக்குச் சொந்தமான பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பிரதான பெயர்ப் பலகை ஆங்கில மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் தலைவரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நிறுவனம், கம்பனிச் சட்டத்தினால் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனமாகக் காணப்படுவதனால் இந்த முறைப்பாடு தொடர்பில் மேலதிக விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது.
மருதானை காவல் நிலையத்தினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையை அண்மித்த பிரதேசங்களில் பொதுமக்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் சில பெயர்ப் பலகைகள் சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படுகின்றன என.	இது தொடர்பில் மருதானை காவல் நிலைய பொறுப்பதிகாரியிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. அந்த அறிவித்தற் பலகைகளை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துமாறு உரிய அனுசரணை வழங்கும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை தேசிய பாதுகாப்பு கல்கி நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் மும்மாத சஞ்சிகை ஆங்கில மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. குறித்த சஞ்சிகையை மும்மொழிகளிலும் விநியோகிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என.
அவிஸ்ஸாவலை டிப்போவுக்குச் சொந்தமான WPNC – 0100 மற்றும் SGHH – 4340 ஆகிய இலக்கங்களைக் கொண்ட பேரூந்து வண்டிகளின் பிரயாண முடிவிட பெயர்ப் பலகைகள் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் டிப்போ முகாமையாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டுள்ளன. அந்த டிப்போவுக்குச் சொந்தமான WPNC – 0100 வண்டியின் பெயர்ப் பலகை மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
கல்வி அமைச்சினூடாக கடந்த ஒக்டோபர் மாதம் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த ‘‘திரதர்ஷி’’ என பெயரிடப்பட்டிருந்த கல்வி கண்காட்சியின் பிரதான பெயர்ப் பலகை மற்றும் அது தொடர்பான செய்தி பத்திரிக்கை அறிக்கைகள் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றன என.	இது தொடர்பில் செயலாளரிடமிருந்து அவதானிப்புகள் கோரப்பட்டன. அதன் அழைப்பிதழும் மும்மொழிகளிலும் விநியோகிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை வலயக் கல்விக் காரியாலயத்தினூடாக கடந்த ஒக்டோபர் மாதம் மாத்தளை மாவட்டத்தில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த ‘‘குரு பிரணாம பாராட்டு விழா’’ சம்பந்தமாக பகுதி முழுவதும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பெனர் (Banner) , அழைப்பு விருந்தினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த அழைப்பிதழ்கள் அனைத்தும் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றன என.	இது தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாத்தளை மாவட்ட செயலாளரினாலும், அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள் போன்றவற்றை இரு மொழிகளிலும் விநியோகிப்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது.
கொட்டிகாவத்தை மக்கள் வங்கிக்குச் சொந்தமான பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த‘‘ பொருட்களை விநியோகிக்கும் பிரிவு’’ எனும் பெயர்ப் பலகை சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என.	இது தொடர்பில் கிளை முகாமையாளரிடமிருந்து அவதானிப்புக்களை கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பெயர்ப் பலகையை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நிமாவ கொலன்னாவை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மக்கள் பார்வைக்காக் காட்சிப்படுத்தப்பட்ட ‘‘ நிமாவ கொலன்னாவை’’ எனும் பெயர்ப் பலகை சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என்று.	இது தொடர்பில் முகாமையாளரிடமிருந்து அவதானிப்புக்களைக் கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறித்த பெயர்ப் பலகையை மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை சுங்கத்திற்குச் சொந்தமான வெல்லம்பிட்டிய மேம்பாலத்திற்கு அருகில் காணப்படும் கொள்கலன்களை இறக்கி வைக்கும் இடத்தில் மக்களின் காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கும் ‘‘ஸ்ரீ லங்கா ரேகுவ’’ எனும் பெயர்ப் பலகையில் காணப்படும் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றது என்று.	இது தொடர்பில் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புக்களைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பெயர்ப் பலகை திருத்தப்பட்டுள்ளது.
தெஹியோவிட்ட பிரதேச சபையினால் விநியோகிக்கப்படும் 1980 ஆம் ஆண்டு 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல் சட்டத்துடன் தொடர்புடைய உரிமத்திற்கு உரிய 23 (ஆ) பிரிவுகள் முழுமையாக சிங்கள மொழியில் காணப்படுகின்றது என்று.	இது தொடர்பில் மத்திய சுற்றுச் சூழல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புக்கள் கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அதிகார சபையினால் தேசிய சுற்றுச் சூழல் சட்டத்திற்கு உரிய சகல உரிமங்களையும் மும்மொழிகளிலும் தயாரிப்பதற்கு முறைமையொன்றை தயார் செய்துள்ளதாகவும் அதற்கேற்ப சம்பந்தப்பட்ட தலைவர்களை அறியப்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவ அமைச்சின் நுவரெலியா காரியாலயத்தினால் கடந்த தினமொன்று நடாத்தப்பட்ட ஊடாக அதிகாரிகளை நிகழ்ச்சித்திட்டத்தின் போது விழிப்புணர்வூட்டும் அந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் போன்ற சகலதும் சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றன என்று.	இது தொடர்பில் செயலாளர், இடர் நிலை தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்வதற்காக துண்டுப்பிரசுரங்களை மும்மொழியிலும் அச்சிடுவதாக செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.
சீதாவக்கபுர நகர சபையினால் நிர்வகிக்கப்படும் கழிவு மேலாண்மை மையத்திற்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பொகுமக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ள ‘‘குப்பை கூளங்களை மீள் சுழற்சி செய்யும் மத்திய நிலையம் மற்றும் உர செயற்றிட்டம்’’ எனும் பெயர்ப் பலகை சிங்கள மொழியில் மாத்திரம் காணப்படுகின்றது என்றும் சீதாவக்கபுர பொது நூலகத்தின் முன்பாக பொறுத்தப்பட்டிருக்கும் பெயர்ப் பலகையிலுள்ள தமிழ் மொழிபெயர்ப்பு எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன என.	இது தொடர்பில் அவதானிப்புகளை கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த பெயர்ப் பலகையைத் திருத்தி காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் 451 ஆம் இலக்க வனப் பாதுகாப்பு அதிகார சபையின் கீழ் பலகை ஆளை ஒன்றை நடாத்திச் செல்வதற்காக பெற்றுக்கொடுக்கப்படும் விண்ணப்பப்படிவம் முழுமையாக சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றது என்று.	இது தொடர்பில் ஆணையாளர் நாயகத்திடமிருந்து அவதானிப்புகளை கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த விண்ணப்பப்படிவத்தை மும்மொழிகளிலும் தயார் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நீர்கொழும்பு மதுவரி திணைக்களத்தில் பொதுமக்கள் பார்வைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகை பிழையாகக் காணப்படுகின்றது என்று	இது தொடர்பில் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து அவதானிப்புக்களைக் கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பெயர்ப் பலகை திருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் காணாமல் போனோர் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மாத்தறை மாவட்டத்தின் கிராம சேவை உத்தியோகத்தர்களினால் அந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ப ஆங்கில மொழியில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்கள் மற்றும் அதற்குரிய ஆவணங்கள் பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என்று.	இது தொடர்பில் அமைச்சின் செயலாளரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த ஆவணத்தை மும்மொழிகளிலும் மாவட்ட செயலாளர்களுக்கு விநியோகிப்பதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை காவல் நிலைய போக்குவரத்துக் காவல் அலுவலர்கள் இருவரால் 2018.01.19 ஆம் திகதி கல்முனை நகர வீதியில் வாகனத்தை செலுத்திய போது தமிழ்மொழி மட்டும் பேசுகின்ற நபரொருவருக்கு வீதிச் சட்டம் மீறப்பட்டுள்ளதென தெரிவித்து வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம்(எம்.ரீ.ஏ.37) சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து அவதானிப்பைக் கோரி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் போக்குவரத்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அலுவலர்களை சேவைக்கு அமர்த்தும் போது தமிழ் மொழியை எழுதக்கூடிய, வாசிக்கக்கூடிய நபர்களை அமர்த்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
அரசாங்க கொள்வனவு செயன்முறையில் அநேகமான தகவல்கள் மற்றும் அதற்குரிய படிவங்கள் ஆங்கில மொழியில் மட்டும் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் தலைவரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய ஆவணங்கள் அரசகரும மொழிகளிலேயே விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கை தேசிய இரத்த தான சேவையினூடாக நபர்கள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இரத்த தான அறிவிப்பு மற்றும் அறிக்கை சிங்கள மொழியில் மட்டும் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் தேசிய இரத்த தான நிறுவனத்தின் பணிப்பாளரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அறிவிப்பை மும்மொழிகளிலும் அச்சிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கீழுள்ள வடக்கு மாகாணங்களிலுள்ள மாவட்ட செயலாளர் காரியாலயம் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயங்களில் சம்பள அட்டவணைகள் ஆங்கில மொழியில் மட்டும் விநியோகிக்கப்படுகின்றன என.	இது தொடர்பில் திறைசேரியின் செயலாளரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரச கணக்கீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம், இந்த சம்பளப் படிவங்களை புதிய கணனி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மும்மொழிகளிலும் நடைமுறைப்படுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என.
சியம்பலாண்டுவ தொகுதிக் கல்விக் காரியாலயத்திற்கு சொந்தமான பிரதான கடிதத் தலைப்பில் ''தொகுதிக் கல்விக் காரியாலயம் சியம்பலாண்டுவ'' எனும் தமிழ் மொழிபெயர்ப்பு பிழையாகக் காணப்படுகின்றதென.	இது தொடர்பில் வலயக் கல்வி பணிப்பாளரிடமிருந்து அவதானிப்புகளைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த கடிதத்தலைப்பு சரியாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
களனிப் பல்கலைக்கழகத்தின் மானிடவியல் பீடத்திற்குரிய முதுமானிப் பட்ட பரீட்சைகளுக்கான விண்ணப்பப்படிவம் சிங்கள மொழியில் மட்டும் விநியோகிக்கப்படுகின்றதென.	இது தொடர்பில் உயர் பட்டப் படிப்பு கல்வி பீடத்தின் பீடாதிபதியிடமிருந்து அவதானிப்புக்களைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த விண்ணப்பப்படிவம் சிங்கள மொழியிலும் தயாரிக்கப்பட்டள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

குருணாகல் வலயக் கல்விக் காரியாலய பணியாட்டொகுதியில் தமிழ் மொழியில் கொடுக்கல் செய்வதற்கு இயலுமையுள்ள அலுவலர்கள் இல்லாததன் காரணமாக அலுவலகத்திற்கு வருகைத் தரும் தமிழ் மக்கள் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் அலுவலகத்திற்குள் குறிப்பிடப்பட்டிருக்கும் விபரங்கள் அடங்கிய பலகைகள், அறிவித்தற் பலகைகள், பெயர்ப் பலகைகள் மற்றும் திசைக்காட்டிப் பலகைகள், மும்மொழிகளிலும் இல்லையென.	இது தொடர்பில் வலயக் கல்வி பணிப்பாளரிடமிருந்து அவதானிப்புக்களைக் கோரி கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அலுவலகத்தில் பெயர்ப் பலகைகள் மும்மொழிகளிலும் காணப்படுவதாகவும், ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய கடிதங்கள் இருமொழிகளிலுமே அனுப்பி வைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
